384
1-65



# தம்பி நில்

நெ. து. சுந்தரவடிவேலு



வரிசை

1

O 7 3NSV,T
N59
177336.

# காணிக்கை

எங்கள் அருஞ் செல்வனுகப் பிறந்து, தன் பள்ளியின் தொண்டனுக இருந்து, தமிழகக் கல்வித் தொண்டர்களின் தோழனுக வளர்ந்து, பிறிதினேப் தன்னேப்போல் கொண்டு உருகி, பள்ளியில் பலருக்கும் பலவும் கிடைக்கத் தூண்டி, திட்டங்கள் சில தந்து, நேர்மையைப் பளிச்சென்று இனிமையோடு எனக்குக் காட்டும் குருவாக வாழ்ந்து, 'எதற்கும் கவலேப் படாதீர்கள் அப்பா' என்று தேற்றி, விரைந்து மறைந்துவிட்ட

குமரகுரு
கா. சு. திருவள்ளுவனுக்கு.

# தம்பி நில்

நெ. து. சுந்தரவடிவேலு

முருகன் & கம்பெனி

32, வெங்கடேச கிராமணி தெரு,

சிந்தாதிரிப்பேட்டை :: சென்னை-2

முதற் பதிப்பு—நவம்பர் 14, 1959

# ஏன் ?

" ஆங்கிலம் தெரிந்த குழந்தைகள் படிக்க எத்தனை நூல்கள்! எவ்வளவு அருமையானவை அப்பா! தமிழ் தெரிந்த குழந்தைகளுக்கும் நூல்கள் வேண்டும். அதே தரத்தில் வேண்டும். இது மற்றவர்களுக்குச் சொல்லி நடப்பதல்ல. நீங்களே எழுதிக் காட்டி விடுங்கள். முதலில் சாக்ரடீசு, இயேசு, காந்தி ஆகியவர்கள் வாழ்க்கையை எழுதுங்கள் " என்று கட்டளையிட்டான் என் மகன், கா. சு. திருவள்ளுவன். இது ஓராண்டிற்கு முன். விளைவு உங்கள் முன்.

இப்போது வெளியாகும் ஐந்து நூல்களையும் அவனுக்குப் படித்துக் காட்டினேன். அவன் ஆங் காங்குத் திருத்தினான்; செம்மைப் படுத்தினான். உள்ள படங்கள் பல அவன் யோசனையில் பிறந் தவை.

இதில் வரும் கருத்துக்கள் அரசினர் கருத்துக் கள் அல்ல. இவற்றிற்கு நானே பொறுப்பு.

இந் நூல்களை நிறையப் பயன் படுத்துங்கள். படிப்பின் போக்கிலே புதுத் திருப்பத்தைக் காணுங் கள். தமிழருக்குப் பெருந்தொண்டு செய்யுங்கள்.

நெ. து. சுந்தரவடிவேலு

14—11—'59

ஏஷியன் பிரிண்டர்ஸ், சென்னை



# தம்பீ, நில்.

தம்பீ, நில். ஒரு சொல் கேள்.

வணக்கம், என்ன அண்ணே?



தம்பீ, நீ யார்?

நான் ஓர் உயிர், அண்ணா.

பலே! இதோ! காலடியில் புல். அதைப் போல் உயிர்.

ஊம்! நான் புல்லா?

இல்லை. அதோ! தென்னை அதைப் போல் உயிர். சரிதானே?


ஊம்! ஊம்! நான் மரமா?

இதோ ஓடி வருகிறது! இது என்ன?

இது நாய்க் குட்டி.

என்ன அழகான குட்டி! இதற்கு உயிர் உண்டா?





இல்லாமல் ஓடுமா?

சரி. இதைப் போல் நீயும்?

போங்க அண்ணு, நான் நாய்க் குட்டியா?

நான் அப்படிச் சொன்னேனு? அது என்ன ஓசை?

மணியோசை. அதோ யானே! அப்பா! எவ்வளவு பெரிது!



உடம்பு பெரிது. கண்ணோ சிறிது.

எவ்வளவு பெருமையாக வருகிறது!

உன்னைப்போல் உயிர்தானே!

இதற்கா நிறுத்தினீர்கள்? நான் யானையா?

இல்லை, இல்லை. யானைக்குட்டி கூட அல்ல. பின் யார்?

நான் மனிதன்.

அப்படி வா! புல்லுக்கும் உயிர், உனக்கும் உயிர். வேற்றுமை என்ன?

புல் நடக்காது. நான் நடப்பேன்.

யானை நடக்கும். நீ நடப்பாய். இரண்டும் ஒன்று?

எப்படி ஒன்றாகும்? யானை பேசாது. நான் பேசுவேன்.



எதைப் பேசுவாய்?

பலவாறு பேசுவேன்.



அன்பாகக் கொஞ்சு
வேன். சினத்தால் சீறுவேன்.

**அவ்வளவுதாஞ ?**

வாழைப் பழத்தில் ஊசி
ஏற்றுவதுபோல் சொல்வேன்.
குத்துகிறமாதிரிப் பேசுவேன்.

**எது நன்ருக இருக்கும் ? எது
பிடிக்கும் ?**

அன்பு மொழி, நோகாமல்
சொல்வது.

**அதை எப்படித் தெரிந்துகொள்வாய் ?**

நினைத்துப் பார்த்தால்
தெரியும்.

**அது முடியுமா ?**


முடியும்.

**யாரால் ?**

மனிதனுல்.

**ஏன் அவனுல் முடியும் ?**

அவனுக்கு அறிவு இருப்ப
தால்.



ஆகவே அவன் பெரியவன்?

ஆம், அறிவால் பெரியவன் மனிதன். அறிவு வளருமா?

ஓ! வளரும்.

அதற்கு வழி?

படிப்பு, கல்வி.

படித்து எதை அறிந்து கொள்ள?

உலகை அறிந்துகொள்ள.

எந்த உலகை?

நாம் இருக்கும் உருண்டை உலகை.

உலகம் உருண்டையா?


ஆம். உருண்டைதான்.

அதில் எதை அறிந்து கொள்ள?

பெரிய நிலங்கள் எவை, சிறிய நாடுகள் எத்தனை...

கடல்கள் எத்தனை?

O-13N8VIT N59
177336.



ஆம். அவற்றையும் அறிந்துகொள்ள.

இன்னும் என்ன ?

எது எது மலையும் ஆறும்.

அப்புறம் ?

மாறும் சூடும் குளிரும்.

இவ்வளவு தானே ?

விளையும் பயிரும் மரமும்.

சரி.



செய்யும் தொழிலும் வாழ்வும்

வேறு ஒன்றும் இல்லையே ?


துடிக்காதே. நினைக்கும் நினைப்பும்.

நல்லது. பொருள், உயிர், எண்ணம் மூன்றும் கற்கிறேன்.

ஏன் கற்க ?

நீங்கள்தான் சொல்லுங்கள்.





வாழும் வழி தெரிய.

அப்படியா! எதைச் செய்யலாம், எங்கே செய்யலாம் என்று அறிய. அதுதானே?

எதைச் செய்யக்கூடாது, எங்கே செய்யக்கூடாது, ஏன் செய்யக் கூடாது, இவற்றையும் அறிய.

அறிந்து நடந்தவர் உண்டா?

உண்டு. சிலர் உண்டு. எங்கும் உண்டு.

அவர்களைப் பற்றி அறியவா?

**ஆம். அறிய, அறிவில் வளர.**

அவர்கள் தேய்ந்த பாதையில் சென்றவர்களா?


**எல்லோரும் அல்ல. புதுவழி காட்டியவர்களும் உண்டு.**

ஆகா! எவ்வளவு கெட்டிக்காரர்கள்! புதுவழி மற்றவர்களுக்குப் புரிந்ததா?

**புரியவில்லை. புரிந்தால் அவர்களே காட்டியிருப்பார்களே!**

சும்மாவாகிலும் இருந்தார்களா?





அவ்வளவு பொறுமை ஏது?

பின் என்ன செய்தார்கள்?


நஞ்சைக் கொடுத்தார்கள்; ஆணி யடித்துக் கொன்றார்கள்; சுட்டுக் கொன்றார்கள்.

அப்பப்பா! என்ன கொடுமை! என்ன வீரம்!

ஆம், அதையும் அறிந்துகொள்.

எதற்கு?

கொடுமையைக் குறைக்க, தியாகத்தை வளர்க்க.



அறிவு! ஒழுங்கு! உறுதி!
வாழ மூன்றும் தேவை.

கெட்டிக்காரத் தம்பி நீ; எல்லாம் புரிந்துகொண்டாயே!

ஊம்! வரட்டுமா அண்ணா?

எங்கே போகிறாய்?

ஆடப்போகிறேன்.

நல்லது, வியர்க்க விளையாடு.

சரி. அப்புறம்?

கூடி விளையாடு.

இன்னும் என்ன?

மற்றதை மறந்து விளையாடு.

ஆகட்டும், வணக்கம்.



அடுத்தது?

தவற்றைக் காட்டுவது உரிமை.
தலையைக் கொடுப்பது கடமை.

இதை உணர்த்த
**நஞ்சுண்டவர்**

**25 காசுகள்**